# Transcript of a speech by Paul Brunton with Tamil translation

Tony has asked me to speak a few words, to those of you who have read some of my books. If I agree, as I do, it is only on the condition that I am not to be taken as a Guru. My job is writing down ideas, which I have gathered in the course of a lifetime study of world literature and particularly Asiatic literature, and talks with teachers themselves. If any of you find some of these ideas are helpful to you, as they certainly have been helpful to me, you are welcome to them. But beyond this communication, I make no claims and have no disciples. I live in retirement and semi-solitude.

டோனி, என் புத்தகங்களைப் படித்துள்ள உங்களில் சிலருக்காக, ஒரு சில வார்த்தைகள் பேசும்படி என்னிடம் கேட்டார். நான் அதற்கு ஒப்புக்கொண்டால், ஒரு நிபந்தனையோடு தான் ஒப்புக் கொள்ள முடியும். அது என்னவென்றால், என்னை ஒரு குருவாக யாரும் நினைக்க வேண்டாம். வாழ்நாள் முழுவதும், உலக இலக்கியங்களை, முக்கியமாக ஆசிய தேசத்து இலக்கியங்களை படித்தது மூலமாகவும், சில ஆசிரியர்களிடம் நேரடியாக பேசியது மூலமாகவும், எனக்கு தோன்றிய எண்ணங்களை எழுதுவது தான் என் பணி. இந்த எண்ணங்கள் எனக்கு நிச்சயம் உதவி புரிந்துள்ளன. உங்களுக்கும் இவற்றிலிருந்து ஏதாவது உதவி கிடைக்குமானால் மகிழ்ச்சி. இதற்கு மேலதிமாக நான் எதுவும் உரிமை கொண்டாடவோ, எனக்கு சீடர்கள் இருப்பதாகவோ நினைக்கவில்லை. நான் பணிகளில் இருந்து ஓய்வெடுத்துக் கொண்டு பெரும்பாலும் தனிமையில் வாழ்ந்து வருகிறேன்.

There is a danger in these studies that you may tend to over emphasize the intellectual elements, to regard them as another branch of academic work. This would be a mistake. In attempting to understand these books, it is important to avoid such a wrong emphasis and to secure a proper balance instead. This must be a balance between the interests of the heart and interests of the head. That is to say, the feelings must be brought into play just as much as the reasoning intellect. It is only by establishing a fine balance between the two that you can come to the verge where intuition may be awakened, the intuition which will lead you to the higher truth.

இந்த படிப்பில் (வேதாந்தம், ஆத்மீகம் பற்றி அவர் எழுதிய புத்தகங்களை குறிப்பிடுகிறார்) ஒரு ஆபத்து இருக்கிறது. அது என்னவென்றால், இவற்றை படிக்கும் போது புத்தியை கொண்டு ஆராய்வதை முதன்மைப் படுத்தினால், இதுவும் மற்றுமொரு பாடதிட்டம் போல ஆகிவிடும். அது தவறு. இந்த புத்தகங்களை புரிந்து கொள்வதில் அப்படி புத்தி ஆராய்ச்சியை முதன்மைப் படுத்துவதை தவிர்த்து, வேறு ஒன்றோடு சமன் செய்ய வேண்டும். அதாவது புத்தியின் தேவைகளோடு ஹ்ருதயத்தின் தேவைகளையும் உணர வேண்டும். அதாவது புத்தியின் வாதங்களோடு ஹ்ருதயத்தின் உணர்ச்சிகளுக்கும் இடம் தர வேண்டும். இவை இரண்டிற்குமான ஒரு சரியான சம நிலையை அடைந்தால், அதன் மூலம் ஒரு உள்ளுணர்வு விழித்து எழும். அந்த உள்ளுணர்வு நம்மை மேலான உண்மைக்கு அருகில் அழைத்துச் செல்லும்.

Of course, you probably know by now that another important, most important process of awakening this kind of intuition is the practice of meditation. This has been very much misunderstood and there are even in the orient all sorts of misconceptions and superstitions about it. Yet, the essence of it is very simple. You are all victims of a machine which is producing thoughts continuously and you have lost control of the machine. Meditation is a process to regain this control and then the biggest obstacle in your way can be cleared. These thoughts make a screen between you and the rest of your inner self. And in that inner self, lies the best part of yourself, the higher self or the over self. Now, all the different systems of Yoga that you have heard about, are mainly devices to bring the mind into concentration and to turn this concentration inwards, so that you are able to withdraw attention from the world outside and learn to listen within. That is the basic principle of all Yogas.

உங்களுக்கே இதற்குள் தெரிந்திருக்கும் - இப்படிப்பட்ட உள்ளுணர்வை எழுப்பும் செயல்முறைகளில், த்யான பயற்சி, முக்கியமான இடத்தை, மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. த்யானம் என்பது அதிகம் தவறாக புரிந்து கொள்ளப் பட்ட ஒரு வார்த்தை ஆகிவிட்டது. கீழை நாடுகளிலேயே கூட த்யானத்தைப் பற்றி பல தவறான கருத்துகளும் மூட நம்பிக்கைகளும் நிலவுகின்றன. ஆனாலும் அதன் உட்கருத்து மிக எளிமையானது தான். நம்

ஒவ்வொருவருக்குள்ளும், இடையறாது எண்ணங்களை தோற்றுவிக்கும் மனம் என்ற ஒரு இயந்திரம் இருந்து கொண்டு நம்மை ஆட்டிப் படைக்கிறது. ஏனென்றால், அந்த இயந்திரத்தின் கட்டுப்பாட்டை நாம் இழந்து விட்டோம். த்யானம் என்பது அந்த இயந்திரத்தை மீண்டும் நம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் ஒரு செயல்முறை, அவ்வளவே. இதை சாதித்துவிட்டால் ஆன்மீக பாதையில் ஒரு முக்கியமான தடை நீங்கிவிடும். இந்த எண்ணங்களே நமக்கும், உள்ளே உறையும் 'நான்' அல்லது ஆன்மாவிற்கும் இடையில் ஒரு திரையாக உள்ளது. உள்ளே உறையும் அந்த 'நான்' நமது உன்னதமான பகுதி ஆகும். அதுவே பரமாத்மா ஆகும். நீங்கள் கேள்விப்படும் அனைத்து யோக முறைகளும், நம் மனதை ஒருமுகப்படுத்தி, அதை உள்முகமாக திருப்புவதற்கான சாதனங்கள் தான். அந்த சாதனையினால் மனம் வெளி உலக நாட்டத்தை விடுத்து உள்ளே கவனிக்கக் கற்றுக் கொள்கிறது. எல்லா யோக முறைகளின் அடிப்படை கொள்கை இவ்வளவே தான்.

When the mind is sufficiently quieted, then and only then, can this higher part of your nature begin to make itself, palpable to you. But it is necessary to point out that meditation, because it offers so much in the end, requires you to give so much. What you have to give is time and practice and even more than anything else is, patience. Without patience you cannot hope to learn meditation. There is no fixed time within which it can be learnt because, each of us is an individual and with some, the pace is quicker, with others, it is slower.

மனம் போதுமான அளவிற்கு அமைதி அடைந்த பின்னரே, நமக்குள் இருக்கும் உயர் இயல்புகளை கொண்ட பகுதியான அந்த ஆன்மா தன்னை வெளிப்படுத்தி கொள்கிறது. ஆனால் த்யானத்தின் முடிவில் இத்தகைய உன்னத அனுபவம் ஒன்று காத்திருப்பதால், நாம் அதற்கு தகுந்த ஒரு விலையைத் தர வேண்டி வரும் என்பதையும் உங்களுக்கு சொல்ல வேண்டும். அதற்கு நீங்கள் உங்கள் நேரத்தையும், விடாமுயற்சியோடு கூடிய பயிற்சியையும், மிக முக்கியமாக பொறுமையையும் விலையாக கொடுக்க

வேண்டும். பொறுமை இல்லையென்றால் த்யானத்தை கற்றுக் கொள்வது நடவாத காரியம். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அதைக் கற்றுக் கொள்ள முடியும் என்று நினைக்க வேண்டாம். சிலருக்கு அது சீக்கிரம் கைகூடும். சிலருக்கு அதிக நேரம் தேவைப்படலாம்.

It is also a matter of the circumstances in which you happen to be placed at the time. They will either hinder or help your learning a meditation, but patience is needed. And many people I have noticed get discouraged in their earlier efforts, because they do not see any progress coming. And that is a mistake to give up prematurely. But with patience, there would come its rewards in the end. Part of this reward is the new inspiration you receive. Inspiration for whatever work you do and especially for those of you who are connected with the arts. Inspiration in the intellectual matters and inspiration in dealing with your daily life. Certainly, for the artists, technique is only part of the game. He needs to become inspired as well and meditation is one of the ways of getting inspired.

அது, (த்யானம் கற்றல்) நீங்கள், குறிப்பிட்ட அந்த நேரத்தில், எந்த சூழ்நிலையில் இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தும் அமைகிறது. உங்கள் சூழ்நிலை உங்களுக்கு த்யானம் கற்க சாதகமாகவோ தடையாகவோ இருக்கலாம். எப்படியானாலும் பொறுமை மிக அவசியம். நான் அறிந்த பலர் ஆரம்ப முயற்சிகளில் எந்த முன்னேற்றமும் காணாததால், ஊக்கத்தை இழந்து விடுவதை பார்க்கிறேன். அப்படி பாதி முயற்சியில் கைவிடுவது தவறு. பொறுமையோடு முயன்றால் முடிவில் நிச்சயம் பலன் கிடைக்கும். அந்த பலன்களின் பகுதியாக எந்த செயலிலும் புதியதொரு அகத் தூண்டுதலை நீங்கள் உணர்வீர்கள். முக்கியமாக நீங்கள் கலைகளோடு தொடர்பு கொண்டவரானால் நிச்சயம் அந்த அகத் தூண்டுதல் உங்களுக்கு கிடைக்கும். புத்திபூர்வமான கார்யங்களிலும் தினப்படி வாழ்க்கையிலுமே கூட அந்த உத்வேகத்தை உணர்வீர்கள். கலைஞர்கள் தங்கள் வேலைக்கு திறமையும் நுட்பமும் மட்டும் போதாது, அகத் தூண்டுதலும் வேண்டும் என்பதை நன்கு அறிவார்கள். அந்த பிரேரணையைப் பெற த்யானம் ஒரு சிறந்த வழி.

Another topic, which is constantly being brought up is the necessity of a Guru. Of course, an instructor in any subject is to help the students of that subject. But the fact remains that there are few competent instructors in the pursuit of truth, who have

themselves realized the truth. It is not hard to find those who have promoted movements, founded societies, created organizations along this line. But their reliability and competence is another matter. Generally, they have something to give, but it is usually mixed with the opinions and interests which may not be so desirable.

அடிக்கடி பேசப்படும் இன்னொரு விஷயம். ஒரு குருவின் தேவை. ஆம். எந்த பயிற்சியின் போதும் ஒரு நல்ல கற்பிப்பவர் இருப்பது உதவிகரமாக தான் இருக்கும். அனால் தாமே உண்மையை உணர்ந்தவராகவும் அதை கற்பிக்க கூடியராகவும் இருப்பவர்கள் மிக குறைவாகத் தான் இருப்பார்கள் அல்லவா? இயக்கங்களை நடத்துபவர்கள், சங்கங்களை தோற்றுவித்தவர்கள், அமைப்புகளை உருவாக்கியவர்கள் பலரை நீங்கள் காணலாம். அவர்களால் உங்களுக்கு சிலவற்றை தரவும் முடியும். ஆனால் பெரும்பாலும் அவற்றில் விரும்பத்தகாத சில அபிப்ராயங்களும், நோக்கங்களும் கலந்தே இருக்கும்.

There are finally two other points. The first is, bring to this quest, a feeling of worship. Because after all you are seeking a communion with a higher power with something above beyond and transcendence of yourself. You cannot approach it as you were to approach your professor. There is something sacred and holy around the very concept. And you must try to waken this attitude that it is like entering a Church which you really respect.

முடிவாக இரண்டு விஷயங்கள். முதல் விஷயம். இந்தத் தேடலில் நீங்கள் பணிவோடு, ஒரு வழிபாடு போல ஈடுபடுங்கள். ஏனென்றால் நீங்கள் எல்லையற்ற சக்தி வாய்ந்த, மனதையும் விஞ்சிய பரம்பொருளோடு ஒன்ற விரும்புகிறீர்கள். அதை நீங்கள் ஒரு பேராசிரியரை அணுகுவது போல நினைக்க முடியாது. இந்த தேடல் தெய்வீகம் நிறைந்த ஒரு பவித்ரமான எண்ணமாகும். நீங்கள் மிகவும் மதிக்கும் ஒரு தேவாலயத்தில் நுழையும் போது என்ன மனப்பான்மையோடு இருப்பீர்களோ, அந்த வழிபடும் மனப்பான்மையோடு இதை அணுகுங்கள்.

And the last point is, the world outside you and around you, the world of other people, is not much interested in the line you have taken and may even be hostile to it. It may try to discourage you or to oppose you. This is understandable. Their past history has made them what they are, just as your past history has made you the seeker that you

are. I suggest therefore, that you should not try to make your pursuit of the truth a conspicuous affair. After all, it is something that does not really concern others, except in its indirect consequences. It is something which concerns you and your higher self only. So, don't make a public show of it or any fuss about it or make any advertisement of it. Keep it to yourself. Only where someone else has strong doubts and is beginning to seek and approaches you, can you profitably discuss it and even then, one should not discuss it more than necessary.

கடைசி விஷயம். உங்களுக்கே வெளியே உங்களை சுற்றியுள்ள உலகில், அதாவது, பொருள்சார் உலகில் உள்ளவர்கள், உங்களுடைய இந்த தேடலில் ஆர்வம் காட்ட மாட்டார்கள். மாறாக அதை வெறுக்கவும் கூடும். அதனால் அவர்கள் அதை எதிர்க்கவும், அதில் உங்கள் ஆர்வத்தை கெடுக்கவும் கூடும். அது புரிந்துக் கொள்ள தக்கதே. அவர்கள் அப்படி இருக்க காரணம் அவர்கள் வளர்ந்த விதம். நீங்கள் வளர்ந்த விதம், நீங்கள் உண்மையை தேடுபவராக இருக்கிறீர்கள். அதனால் உங்களுடைய இந்த ஆன்மீகத்தேடலை வெளி உலகம் அறியாமலே வைத்து கொள்ளும்படி நான் பரிந்துரைப்பேன். பார்க்கப் போனால், இதில் ஏதோ சில மறைமுக விளைவுகளைத் தவிர வெளி ஆட்களுக்கு சம்பந்தம் ஒன்றும் இல்லையே. இது நீங்களும் உங்களுடைய ஆத்மாவும் சம்பந்த பட்ட விஷயம் தானே. அதனால் இதை உலகில் காட்சிப் படுத்தாதீர்கள். இதைப் பற்றிய வம்பிற்கோ விளம்பரத்திற்கோ இடம் கொடுக்காதீர்கள். உங்கள் ஆன்மீகத் தேடலை உங்களுக்குள்ளேயே வைத்துக் கொள்ளுங்கள். ஆன்மீகத் தேடலில் ஆரம்ப நிலையில் உள்ள ஏதோ ஒரு உண்மையான சாதகன் தன் வலுவான சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள உங்களை நாடினால் அப்போது உபயோகமான ஏதோ உரையாடல் நிகழலாம். அப்போதும் தேவைக்கு மேல் பேச்சுவார்த்தை வேண்டாம்.

The last words of the Buddha before he died were, “Be a lamp unto yourselves”. Well, Goodbye and may the peace and tranquility which already lies deep within you, covered up by your ego and its thoughts, May that reveal itself to you. Peace! Peace! Peace!

‘‘உனக்கு நீயே ஒரு ஒளிவிளக்காக இரு" என்று புத்தர் தான் இறக்கும் தருவாயில் சொன்ன வார்த்தைகளை நினைவு கூறி விடை பெறுகிறேன். உங்களுக்கு உள்ளேயே அடி ஆழத்தில் அமைதியும் சாந்தியும் இருக்கிறது.

அது அகங்காரத்தாலும் அதில் தோன்றும் எண்ணங்களாலும் திரையிடப்பட்டுள்ளது. அது உங்களை கண்டடையட்டும். சாந்தி! சாந்தி! சாந்தி!